18 OCT 2010

சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் – சங்கரன்கோவில் நகராட்சி – குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் கட்டணம், முன் வைப்புத் தொகை நிர்ணயம் செய்தல் மற்றும் கேளிக்கை வரி ஈடு செய் இழப்பீட்டு நிதியின் கீழ் ரூபாய்1.33 கோடி வழங்குதல் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவை தொகைக்காக பயன்படுத்திக்கொள்ள ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ3) துறை

அரசாணை (நிலை) எண்.246

நாள்:15.10.2010
புரட்டாசி 29, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.5265/07/ கு.வ.2/நாள் 27.03.2010 மற்றும் கடித நாள் 7.9.2010, 1.10.2010

.....

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள செயற்குறிப்பில், தற்போது சங்கரன்கோவில் நகராட்சியில் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு (ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்பிற்கும் சேர்த்து) கீழ்க்கண்டவாறு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்:-

| விவரம் | பயன்பாடு | கட்டணத் தொகை |
|---|---|---|
| முன்வைப்புத் தொகை (ஒரு தடவை மட்டும் – ஏற்கனவே உள்ள மற்றும் புதிய இணைப்புகளுக்கும் சேர்த்து) | வீட்டு உபயோகம் | ரூ. 9,000/– |
| | வணிக உபயோகம் | ரூ.20,000/– |
| மாதாந்திர குடிநீர் கட்டணம் (மூன்று வருடங்களுக்கு ஒரு முறை 3% உயர்த்திக் கொள்ளுதல்) | வீட்டு உபயோகம் | ரூ.100–200 |
| | வணிக உபயோகம் | ரூ.200–300 |

2) நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது செயற்குறிப்பில் சங்கரன்கோவில் நகராட்சியின் நிதிநிலைமை காரணமாகவும், புதிய குடிநீர் குழாய் இணைப்புகளை நகராட்சி நிர்வாகம் கொடுக்க தவறியதால், மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கையில் ரூபாய் 15 இலட்சத்திற்கு மேலாக இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சங்கரன்கோவில் நகராட்சி நிர்வாகம் செலுத்த வேண்டிய பராமரிப்பு கட்டணத் தொகை காலதாமதமாக செலுத்தவேண்டி வருவதால் அதற்கான வட்டி மற்றும் கட்டணம் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

3) சங்கரன்கோவில் நகராட்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நூற்று வீதக் கட்டணம் (Centage Charges) ரூபாய் 133.22 இலட்சத்தை கேளிக்கை வரி ஈடுசெய் இழப்பீட்டு நிதியின் கீழ் மானியமாக வழங்குமாறும், கீழ்க்கண்டவாறு குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு (ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்பிற்கும் சேர்த்து) கட்டணம் நிர்ணயம் செய்யுமாறும் கோரியுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| விவரம் | பயன்பாடு | கட்டணத் தொகை |
|---|---|---|
| முன்வைப்புத் தொகை (ஒரு தடவை மட்டும் –ஏற்கனவே உள்ள மற்றும் புதிய இணைப்புகளுக்கும் சேர்த்து) | வீட்டு உபயோகம் | ரூ. 6,000/– |
| | வணிக உபயோகம் | ரூ.15,000/– |
| மாதாந்திர குடிநீர் கட்டணம் (மூன்று வருடங்களுக்கு ஒரு முறை 3% உயர்த்திக் கொள்ளுதல்) | வீட்டு உபயோகம் | ரூ.100 |
| | வணிக உபயோகம் | ரூ.300 |

4) இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பு, கேளிக்கை வரி ஈடு செய் இழப்பீட்டு நிதியின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை தேர்வு செய்து, ஒப்புதல் அளிக்கும் குழு கூட்டத்தின் முதலாவது குழுவின் ஒப்புதலுக்காக, 5.10.2010 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வைக்கப்பட்டது. அக்குழு , மேற்கண்ட ரூபாய்1.33 கோடி நிதியை சங்கரன்கோவில் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினையும், கேளிக்கை வரி ஈடு செய் இழப்பீட்டு நிதியின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை தேர்வு செய்து, ஒப்புதல் அளிக்கும் குழுவின் ஒப்புதலையும் அரசு கவனமாக பரிசீலித்து, நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, சங்கரன்கோவில் நகராட்சியில் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு (ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்பிற்கும் சேர்த்து) கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்துகொள்ளவும், கேளிக்கை வரி ஈடுசெய் இழப்பீட்டு நிதியிலிருந்து ரூபாய் 1.33 கோடியை (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து மூன்று லட்சம் மட்டும்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகைக்காக பயன்படுத்திக்கொள்ள சங்கரன்கோவில் நகராட்சிக்கு வழங்க ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

| விவரம் | பயன்பாடு | கட்டணத் தொகை |
|---|---|---|
| முன்வைப்புத் தொகை (ஒரு தடவை மட்டும் –ஏற்கனவே உள்ள மற்றும் புதிய இணைப்புகளுக்கும் சேர்த்து) | வீட்டு உபயோகம் | ரூ. 6,000/– |
| | வணிக உபயோகம் | ரூ.15,000/– |
| மாதாந்திர குடிநீர் கட்டணம் (மூன்று வருடங்களுக்கு ஒரு முறை 3% உயர்த்திக் கொள்ளுதல்) | வீட்டு உபயோகம் | ரூ.100 |
| | வணிக உபயோகம் | ரூ.300 |

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் , சென்னை –5.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
ஆணையாளர், சங்கரன்கோவில் நகராட்சி (நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக.)

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலரின் தனிச் செயலர், சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(கு.வ.1/ கு.வ 2/ கு.வ4/வ.செ.தி/ ந.நி 4/ அ.ந.2) துறை, சென்னை –9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.